## 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த

# முரசொலி செல்வம் - முன்னணியினர் மறைவுக்கு இரங்கல் - தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, டிச. 24 -**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த முரசொலி செல்வம் மற்றும் முன்னணியினர் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

அவை வருமாறு:-

● கழகம் தொடங்கப்பட்ட காலம் தொட்டு கழகக் கொள்கைகளை பரப்பியவரும் - 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த எழுத்தாளரும் - இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவரும் - தலைசிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளருமான திரு. முரசொலி செல்வம்.

தந்தை பெரியார் வழியில் பகுத்தறிவு - சுயமரியாதைக் கொள்கை உணர்வு மிக்கவராகவும், திராவிடக் கொள்கை உணர்வுகொண்ட தேசிய அரசியல்வாதியாகவும் திகழ்ந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும் - ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான திரு. ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் திரு. கோ.சண்முகநாதன்

மாவட்டக் கழக முன்னாள் செயலாளரும் - உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும் - கழக சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான கும்முடிப்பூண்டி கி.வேணு,

தி.மு.க. தலைமை நிலையச் செயலாளரும் - சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான கு.க.செல்வம்,

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளரும் - விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான நா.புகழேந்தி.

தலைமைக் கழக அலுவலக துணை மேலாளர் என். ஜெயக்குமார்,

கழக மூத்த முன்னோடியும் - இலக்கிய அணி மாநில இணைச் செயலாளருமான கயல்தினகரன்,

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அவைத் தலைவரும் - நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான த. வேணுகோபால்,

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் தலைவர் வே. சுப்புராமன்,

கழக இலக்கிய அணித் தலைவர் புலவர் இந்திரகுமாரி,

தொ.மு.ச. பேரவை இணைப் பொதுச் செயலாளர் மா. பேச்சிமுத்து,

மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் கழக மூத்த வழக்கறிஞர் அ.அ.ஜின்னா,

ஈரோடு வடக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோபி. வி.பி.சண்முகசுந்தரம்,

கழக சட்ட திட்டக் திருத்தக்குழு உறுப்பினர் - கோவை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கோவை இரா. மோகன்,

சென்னை மாநகராட்சி முன்னாள் ஆளுங்கட்சித் தலைவர் சி.வி. மலையன்

தலைமைக் கழகப் பேச்சாளர் சீரணி சண்முகம்,

கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் கோவை செல்வராஜ்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கழக மூத்த முன்னோடியும் - சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான திருப்பெரும்புதூர் ஏ.கோதண்டம்,

முன்னாள் அமைச்சரும் - கழக ஆதிதிராவிடர் நலக்குழு தலைவருமான க.சுந்தரம்,

பெரம்பலூர் மாவட்டம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் - மொழிபோர்த் தியாகியுமான எஸ். மணி,

நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் - முன்னாள் நகர் மன்றத் தலைவருமான கோபால் (எ) மு. பழனிவேலன்,

தமிழ் உணர்வும் தளராத போர்க்குணமும் கொண்டவர் திராவிட இயக்கச் சிந்தனைவுடன் தீவிரமாகச் செயல்பட்டவர் கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்,

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கழக மூத்த முன்னோடி மன்னப்பன்,

முன்னாள் சைதை தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் து. புருஷோத்தமன்,

நாகை மாவட்டம், நாகை நகர முன்னாள் செயலாளர் போலீஸ் அ. பன்னீர்,

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் என்.மருதுகணேஷ் அவர்களின் தாயார் திருமதி. பார்வதி நாராயணசாமி,

சென்னை தெற்கு மாவட்டம், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான ஆலப்பாக்கம் கு. சண்முகம்,

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், போளூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் - மாவட்ட அவைத் தலைவருமான வழக்கறிஞர் இராஜேந்திரன்,

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகரக் கழக மூத்த முன்னோடி மிசாகுமரன்

சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் கே.எஸ். மணிமுத்து,

காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் செயலாளரும் - ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான கண்டோன்மெண்ட் சி. சண்முகம்,

புதுச்சேரி மாநில முன்னாள் முதலமைச்சரும் - மாநில முன்னாள் அமைப்பாளர் டி.இராமச்சந்திரன்,

சென்னை தென்மேற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான திருமதி ஷீபா வாசு,

புதுச்சேரி மாநில கழக மூத்த முன்னோடியும் - தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவருமான வழக்கறிஞர் ர. பலராமன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### கழகக் கொள்கைகளை பரப்பியவர் முரசொலி செல்வம்!



**கழகம் தொடங்கப்பட்ட காலம் தொட்டு கழகக் கொள்கைகளை பரப்பியவரும் - 60 ஆண்டுகால கழக வரலாற்றை முழுமையாக கழகத் தோழர்களிடம் கொண்டு சேர்த்த எழுத்தாளரும் - இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவரும் - தலைசிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளருமான திரு. முரசொலி செல்வம் - என்று இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

# புதுக்கோட்டை மாவட்டம் - கீரனூரில் அரசு தொழிற் பயிற்சி நிலையம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப் பாண்டியன் திறந்து வைத்தனர்!

புதுக்கோட்டை டிச.24

புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில், கந்தர்வக் கோட்டை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், முன்னாள் அரசு வழக்கறிஞர், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 18.12.2024 அன்று திறந்து வைத்து, மாணாக்கர்களுக்கு சேர்க்கைக்கான ஆணைகளை வழங்கினார்கள்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2024-25 ஆம் நிதியாண்டில் நடைபெற்ற சட்டசபையில் 10 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை அமைத்திட அறிவித்தார்கள். அந்தவகையில் ரூ.111 கோடி முதலீட்டில் 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் துவக்க ப்பட்டுள்ளது. அதன்படி புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில், கந்தர்வக் கோட்டை அரசு தொழிற் பயிற்சி நிலையம் இன்றையதினம் திறந்து வைக்கப் பட்டது. தற்போது, தற்காலிக கட்டிடமாக கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படுகிறது. இந்நிலையத்திற்கு 465 இலட்சம் கருவிகள், தளவாடங்களுக்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த கந்தர்வக் கோட்டை அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்காக, கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி, குளத்தூர் வட்டம், நாஞ்சூர் கிராமத்தில் 3.5 ஏக்கர் அரசு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்த ப்பட்டோர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், மாணாக்கர்களுக்கு தேவையான, பள்ளி வகுப்பறைகள் கட்டுதல், புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் கட்டுதல், உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், உயர் பணிகளுக்கு செல்லும் வகையில் தொழிற் பயிற்சிகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில், கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், கந்தர்வக்கோட்டை அரசு தொழிற் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை மற்றும் விராலிமலையில் 2 அரசினர் தொழிற்பயிற்சி நிலை யங்களும், 11 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகிறது. 8ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/ மாணவிகளுக்கு பொருத்துநர், கடைசலர், இயந்திர வேலையாள், கம்மியர் மோட்டார் வண்டி, கம்பியாள், கம்மியர் கருவிகள், வெல்டர், பம்ப் மெக்கானிக், எலக்ட்ரீசியன், சிவில் இன்சினியரிங் அசிஸ்டெண்ட், எம்.ஆர்.ஏசி, கணினி இயக்குபவர், திட்டமிடுதல் உதவியாளர், மேனுபேக்சரிங் ப்ராசஸ் கண்ட்ரோல் மற்றும் ஆட்டோமேசன், அட்வான்ஸ்டு CNC மெஷினிங் டெக்னிசியன், மெக்கானிக் எலக்ட்ரிக் வெகிக்கிள், இன்டெஸ்டிரியல்ரோபோடிக்ஸ் மற்றும் மெனுபெக்சரிங் டெக்னிசியன் போன்ற தொழில்பிரிவுகளில் 2024 ஆம் ஆண்டில் 1,121 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, தேர்ச்சி பெற்ற மாணவ/ மாணவிகளுக்கு சான்று வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அரசு மற்றும் முன்னணி தனியார் நிறுவனங்களில் 1,050 பயிற்சியாளர்கள் தொழிற்பழகுநராக மாதம் ரூ.8,000/ முதல் ரூ.16,000/ ஊதியத்துடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

எனவே. மாணாக்கார்கள் அனைவரும் தமிழக அரசின் கல்வி சார்ந்த திட்டங்களை பெற்று, கல்வியில் சிறந்து விளங்கி புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்திட வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர், புதுக் கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற எம்.சின்னத்துரை, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, குன்றா ண்டார் கோவில் ஒன்றிய குழுத் தலைவர் பாண்டிச்செல்வி கே.ஆர்.என்.போஸ், கீரனூர் பேரூராட்சித் தலைவர் த.ஜெயமீரா ரவிக்குமார், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ. பாஞ்சாலன், பேரூராட்சி துணைத் தலைவர் அ.முகமது இம்தியாஸ், குன்றாண்டார் கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்கள் மா.சுந்தர கணபதி (கந்தர்வக் கோட்டை) (பொ), கோ. பாலசுப்ரமணியன் (புதுக் கோட்டை), தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினர் மருத்துவர் செல்வராஜ், குளத்தூர் வட்டாட்சியர் கவியரசன், பள்ளி தலைமையாசிரியர் பரிமளம், கீரனூர் பேரூராட்சி செயல் அலுவலர் சிவராஜ் மற்றும் பி.அண்ணாதுரை, டி. செல்வம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## தந்தை பெரியார் 51வது நினைவு நாள்! (24.12.2024)

# முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் காலை 9.30 மணிக்கு தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்!


## சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளான 24.12.2024 செவ்வாய்கிழமை அன்று காலை 9.30 மணி அளவில் சென்னை, அண்ணா சாலையில் (சிம்சன் அருகில்) அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

நாள் : 22-12-2024

**நே.சிற்றரசு,**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



## மேயர் திலகவதியின் கணவர் –

# புதுக்கோட்டை மாநகரச் செயலாளர் ஆ.செந்தில் மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி!

புதுக்கோட்டை. டிச. 24-

புதுக்கோட்டை மாநகரச் செயலாளர் செந்தில் நேற்று காலை மாரடைப்பால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

புதுக்கோட்டை கழக முன்னோடி மறைந்த மிசா ஆறுமுகம் அவர்களின் மகனும், புதுக்கோட்டை மேயர் திலகவதி செந்திலின் கணவரும்,

புதுக்கோட்டை மாநகரச் செயலாளருமான ஆ. செந்தில் அவர்கள் நேற்று (23.12.2024) காலை மாரடைப்பால் மறைவெய்தினார். அவருக்கு வயது (56).



இவருக்கு செ.லோகேஷ், செ.கணேஷ் ஆகிய இரு மகன்கள் உள்ளனர்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழக முன்னணியினர், பொது மக்கள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ஆ.செந்தில் அவர்கள், முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளராகவும், முன்னாள் மாவட்ட பொருளாளராகவும் பதவி வகித்தவர். இவர் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது உடல் நல்லடக்கம் இன்று (24.12.2024) மாலை புதுக்கோட்டையில் நடைபெறுகிறது.

அன்னாரது இறுதி ஊர்வலத்திலும் கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.



சேலத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி இளைய தமிழகம் நண்பர்கள் சார்பில் கருத்தரங்கம் மாநகர மேயர் ஆ . ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பொறியாளர் டி.ராஜேந்திரன், மருத்துவர்கள் முத்தரசன், மெர்சி, மத்திய மாவட்ட இலக்கிய அணி துண அமைப்பாளர். டி.பிரபு, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் தளவாய்ப்பட்டி.ராஜா, திராவிட கழக எழுத்தாளர். வே. மதிமாறன். பகுத்தறிவாளர் கழக பொதுச் செயலாளர் தமிழ். பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள்.

# புதுக்கோட்டை மாநகரச் செயலாளர் ஆ.செந்தில் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 24-

புதுக்கோட்டை கழக முன்னோடி - மறைந்த மிசா ஆறுமுகம் அவர்களின் மகனும், புதுக்கோட்டை மேயர் திலகவதியின் கணவரும், புதுக்கோட்டை மாநகரச் செயலாளருமான ஆ.செந்தில் அவர்கள் நேற்று (23.12.2024) காலை மாரடைப்பால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது (56).

மறைந்த ஆ.செந்தில் அவர்கள் சிறுவயது முதலே கழகத்தின் மீது பற்று கொண்டு கழகப் பணியாற்றியவர். அவர் முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளராகவும், முன்னாள் மாவட்ட பொருளாளராகவும் பதவி வகித்து கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர். மேலும் இவர் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

அவரது மறைவு கழகத்திற்கு இழப்பு என்றால் அது மிகையல்ல.

அன்னாரது மறைவு செய்தி அறிந்ததும், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை, கணவரை இழந்துவாடும் மேயர் திலகவதிக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் தெரிவித்துள்ளார்.



கழகத்தின் இளைஞரணி செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் மாநில துணைச் செயலாளரும் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் பொறுப்பாளருமான எழில்மாறன் செல்வேந்திரன் தலைமையில் திருச்சி மணிகண்டம் சேதுராப்பட்டி அமைதி பவனும் என்ற மன வளர்ச்சி குன்றியோர் கூர்நோக்கு இல்லத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் திருவரங்கம் சாய்சரண் முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.